தே பிரித்தோ மேல்நிலைப்பள்ளி – தேவகோட்டை.

# முதல் திருப்புதல் தேர்வு – 2025 – சிவகங்கை மாவட்டம்.
## மேல்நிலை முதலாம் ஆண்டு (+1).
## உயிரி – விலங்கியல் விடைக்குறிப்பு

==========================================================

**பகுதி – I** 8 x 1 = 8

| Q.NO | A – TYPE | | மார்க் | | |
|---|---|---|---|---|---|
| 1 | இ | R.H விட்டேக்கர் | 1 | | |
| 2 | அ | வளைதசைப் புழுக்கள் | 1 | | |
| 3 | ஆ | இணைப்புத் திசு | 1 | | |
| 4 | இ | சிவப்பணுக்களின் புறப்பரப்பில் ஆன்டிஜன் இருப்பது | 1 | | |
| 5 | அ | மையோகுளோபின் | 1 | | |
| 6 | அ | பலமுனை நயூரான்கள் | 1 | | |
| 7 | ஆ | மண்புழு | 1 | | |
| 8 | ஆ | ஸ்டிப்ளிங்க் | 1 | | |

**பகுதி – II**

**ஏதேனும் நன்கு வினாக்களுக்கு மட்டும் விடையளி:** 4 x 2 = 8

| | | |
|---|---|---|
| 9 | **மரபுத் தொகுதி தொடர்பு மரம்:**<br>1. உயிரினங்களுக்கு இடையே உள்ள **பரிணாம மற்றும் மரபியல் தொடர்புகளை அடிப்படையாகக் கொண்டு உருவாக்கப்பட்ட வகைப்பாடு** மரபுத் தொகுதி தொடர்பு (Phylogenetic) அல்லது கிளாடிஸ்டிக் வகைப்பாடு எனப்படுகிறது. | 2 Mark |
| 10 | **கருசூழ் படலங்கள்:**<br>1. அம்னியான், அலன்டாய்ஸ், கோரியான மற்றும் கருவுணவுப்பை. | 2 MARK |
| 11 | **தன்மயமாதல்:**<br>1. உட்கிரகிக்கப்பட்ட **உணவுப் பொருட்களை உடலின் அனைத்துத் திசுக்களும் பயன்படுத்தி அவற்றைப் புரோட்டோபிளாசப் பொருட்களாக மாற்றும் நிகழ்ச்சி** தன்மயமாதல் எனப்படும். | 2 MARK |
| 12 | **மெட்ஹீமோகுளோபின்:**<br>1. ஹீம் பகுதிப்பொருளான, இரும்பு **இயல்பான ஃபெரஸ் நிலையில் இல்லாமல் ஃபெரிக் நிலையில் இருந்தால்** அதற்கு மெட்ஹீமோகுளோபின் என்று பெயர்.<br>2. இதனுடன் ஆக்ஸிஜன் இணைவதில்லை. | 1 ½<br>½<br>2 MARK |
| 13 | **டெட்டனி:**<br>1. **பாராதைராய்டு ஹார்மோன் பற்றாக்குறையின்** காரணமாக உடலில் கால்சியத்தின் அளவு குறைகிறது.<br>2. இதனால் ஏற்படும் **தீவிரத்தசை இறுக்கம்** டெட்டனி எனப்படுகிறது. | 1<br>1<br>2 Mark |
| 14 | **அரக்கின் பொருளாதார முக்கியத்துவம்:**<br>1. முத்திரை **மெழுகு தயாரிக்கவும்** ஒளியியல் கருவிகளில் **ஒட்டும் பொருளாகவும்** அரக்கு பயன்படுகின்றது.<br>2. இது சிறந்தமின் கடத்தாப் பொருளாக செயல்படுவதால் **மின்சாரத் துறையிலும்** அதிகம் பயன்படுகிறது.<br>3. **காலணி தயாரிப்பிலும்** தோல் பொருட்களை பளபளப்பாக்கவும், **மரப்பூச்சு தயாரிக்கவும்** பயன்படுகிறது. | ஏதேனும் 2 மட்டும்<br>2 MARK |



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

4. புகைப்படங்கள், செதுக்கித் தயாரிக்கும் பொருட்கள், **நெகிழி வார்ப்பு பொருட்கள்** மற்றும் **அடுக்குப்பலகைத் தாள் படலம் தயாரிப்பிலும்** பயன்படுகிறது.
5. **தங்கநகைகளின் உள்ளீட்டுப்** பொருளாகவும் பயன்படுகிறது.

**பகுதி – III**

**ஏதேனும் மூன்று வினாக்களுக்கு மட்டும் விடையளி. வினா எண் 19 க்கு கண்டிப்பாக விடையளிக்கவும்.** **3 X 3 = 9**

**15**

**விலங்கியல் பூங்காக்கள்:**

1. மனித மேற்பார்வையுடன் கூடிய பாதுகாப்பான வனப்பகுதியில் காட்டு விலங்குகளை வைத்திருத்தல். — 1
2. விலங்குகளின் உணவு முறைகளையும் நடத்தை முறைகளையும் அறிந்து கொள்ள முடியும். — ½

**விலங்குகள் சரணாலயம்:**

3. காட்டு விலங்குகள் இயற்கையான சூழலில் பராமரிக்க படுகின்றன. — 1
4. விலங்குகளின் உணவு முறைகளையும் நடத்தை முறைகளையும் அறிந்து கொள்ள முடியாது. — ½

**3 MARK**

**16**

**ஆண் மற்றும் பெண் கரப்பான் பூச்சிகளுக்கான வேறுபாடுகள்**

| பண்புகள் | ஆண் கரப்பான் பூச்சி | பெண் கரப்பான் பூச்சி |
|---|---|---|
| வயிறு | நீண்டது மற்றும் குறுகலானது. | குட்டையானது மற்றும் அகன்றது. |
| கண்டங்கள் | 9– தெளிவான வயிற்றுப் புற கண்டங்கள் உள்ளன. | 7– தெளிவான வயிற்றுப் புற கண்டங்கள் உள்ளன. |
| மலப்புழைநீட்சி | காணப்படுகின்றன. | காணப்படுவதில்லை. |
| டெர்கம் | 7வது டெர்கம் 8வது டெர்கத்தைமூடியுள்ளது. | 7வது டெர்கம் 8 மற்றும் 9வது டெர்கங்களை மூடியுள்ளது. |
| இனப்பெருக்கப்பை | காணப்படுவதில்லை. | காணப்படுகிறது. |
| உணர்கொம்பு நீட்சிகள் | அதிக நீளம் கொண்டுள்ளது. | குறைந்த நீளம் கொண்டுள்ளது. |
| இறக்கைகள் | கடைசி வயிற்றுக் கண்டத்தைத் தாண்டியும் நீண்டுள்ளது. | வயிற்றுப் பின்முனை வரை மட்டுமே நீண்டுள்ளது. |

**ஏதேனும் 3 மட்டும்**

**3 MARK**

**17**

**நிணநீர் என்றல் என்ன? அதன் பணிகளை எழுதுக.**

1. இரத்த நுண் நாளங்களிலிருந்து திசுக்களுக்குள் கசியும் 90% திரவம் மீண்டும் இரத்த நுண்நாளங்களுக்குள்ளேயே நுழைகின்றன. — 1
2. எஞ்சிய 10% திரவத்தை நிணநீர் நாளங்கள் இரத்தக்குழாய்களுக்குக் கொண்டு செல்கிறது.
3. **இந்த நிணநீர் நாளங்களில் உள்ள திரவத்திற்கு நிணநீர்என்று பெயர்.**

**பணிகள்:**

**பணிகள் ஏதேனும் 2 மட்டும்** — 2

4. நிணநீர் முடிச்சுகளில் காணப்படும் குறுகிய பைக்குழிகளின் (**Sinusoids**) சுவர்ப்பகுதியில் மாக்ரோஃபேஜ்கள் (**Macrophages**) உள்ளன. இரத்தத்தில் நுழையும் நோய்க்கிருமிகளை மாக்ரோஃபேஜ் உதவியுடன் நிணநீர் முடிச்சுகள் தடுக்கின்றன.
5. நிணநீர் உறுப்புகளிலுள்ள நோய் எதிர்ப்பாற்றல் தன்மை (**Lymphocytic cells**) மிக்க செல்களையும் உள்ளடக்கியதாகும்.
6. சிறுகுடல் சுவரிலுள்ள குடலுறிஞ்சிகளில் உள்ள லாக்டியல் நாளங்களில் காணப்படும் நிணநீர் மூலம் கொழுப்புப் பொருள்கள் உறிஞ்சப்படுகிறது.

**3 MARK**



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

| | | |
|---|---|---|
| 18 | **மூளை தண்டுவட திரவத்தின பணிகள்:**<br>1. மைய நரம்பு மண்டலப்பகுதிகளுக்கு **மிதத்தல் தன்மையை** இத்திரவம் அளிக்கிறது.<br>2. மூளைமற்றும் தண்டுவடத்திற்குப் பாதுகாப்பாக **அதிர்ச்சி தாங்கியாகவும்** இத்திரவம் பயன்படுகிறது.<br>3. மூளைசெல்களுக்குத் தேவையான **ஆக்ஸிஜன், உணவு ஆகியவற்றை கடத்துகிறது.**<br>4. அதேவேளையில் மூளையின் **வளர்சிதைமாற்றக் கழிவுகளை இரத்தத்திற்கு அனுப்பும்** வேலையையும்,<br>5. மூளைநாளங்களின் **உள்அழுத்தத்தை நிலையாகப் பராமரிக்கும்** வேலையையும் மூளைதண்டுவடத் திரவம் செய்கிறது. | **ஏதேனும் 3 மட்டும்**<br><br>**3 MARK** |
| 19 | **மீன்களின் உணவூட்டம்:**<br>1. மீன்களில் ஒமேகா 3 கொழுப்பு அமிலங்கள் நிறைந்துள்ளன.<br>2. கால்சியம், மெக்னீசியம், பாஸ்பரஸ், பொட்டாசியம், இரும்பு, மாங்கனீசு, அயோடின் மற்றும் தாமிரம் போன்ற தனிமங்களும் உள்ளன.<br>3. மீன் எண்ணெய்யில் , வைட்டமின் A மற்றும் D மிகுந்துள்ளது. | 1<br>1<br>1<br>**3 MARK** |

**பகுதி – IV**

**அனைத்து வினாக்களுக்கும் விடையளி:** **2 x 5 = 10**

| | | |
|---|---|---|
| 20 A | **எபித்தீலிய திசுவின் வகைகள் மற்றும் பண்புகள்:**<br>**எபிதீலியத்திசு:**<br>➢ உடலின் மேற்பரப்பிலும் உடற்குழியினைச் சுற்றிலும் காணப்படும் செல் வரிசையானது எபிதீலியத்திசு எனப்படும்.<br>**வகைகள்:**<br>➢ **எளிய எபிதீலியம்**<br>➢ **கூட்டு எபிதீலியம்** (அல்லது) அடுக்கு எபிதீலியம்.<br>**எளிய எபிதீலியம்:**<br>➢ ஓரடுக்கு செல்களால் ஆனது.<br>➢ உறிஞ்சும், சுரக்கும் மற்றும் வடிகட்டும் உறுப்புகளில் இவைகாணப்படுகின்றன.<br>**வகைகள்:**<br>➢ தட்டைவடிவ எபிதீலியம், கனசதுரவடிவ எபிதீலியம், தூண்வடிவ எபிதீலியம், குறு இழை கொண்ட எபிதீலியம் மற்றும் பொய் அடுக்கு எபிதீலியம்.<br>**தட்டைவடிவ எபிதீலியம்:**<br>➢ மெல்லிய தட்டையான ஓரடுக்கு செல்களால் ஆனது,<br>➢ ஒழுங்கற்ற விளிம்புகளைக் கொண்ட எபிதீலியம்.<br>**கனசதுர வடிவ எபிதீலியம்:**<br>➢ ஓரடுக்கு, கனசதுரவடிவச் செல்களைக் கொண்டவை.<br>**தூண்வடிவ எபிதீலிய செல்கள்:**<br>➢ உயரமான ஓரடுக்குச்செல்களால் ஆனவை.<br>➢ வட்ட மற்றும் நீள்வட்ட உட்கருவைச் செல்லின் அடிப்பகுதியில் கொண்டவை.<br>➢ **மாறுபாடுகள்: மைக்ரோவில்லை.**<br>➢ **கோப்பை வடிவச்செல்கள்:** கோழைப்பொருளைச் சுரக்கும்.<br>**பொய் அடுக்கு எபிதீலிய செல்கள்:**<br>➢ தூண்வடிவத்திலும் சமமற்ற அளவுகளிலும் காணப்படும்.<br>➢ இவ்வகைஎபிதீலியம் ஓரடுக்கினால் ஆனது.<br>➢ ஆனாலும் பார்ப்பதற்குப்பல அடுக்குகள் போன்று தோற்றமளிக்கிறது.<br>**(கூட்டு எபிதீலியத்தின் பண்புகள் எழுதியிருந்தால் மதிப்பெண் வழங்கலாம்)** | 1<br><br>1<br><br>1<br><br>1<br><br>½<br><br>½<br>**5 Mark** |

| OR | | |
|---|---|---|
| 20. B | **சிறுநீரகப் பணிகளை நெறிப்படுத்தும் உறுப்புகள்:**<br>➢ ஹைப்போதலாமஸ்,<br>➢ ஜக்ஸ்டாகிளாமருலார் அமைப்பு,<br>➢ இதயம்.<br>**சிறுநீர் உருவாக்கத்தில் ADH ன் பங்கு:**<br>**நேர்மறை பின்னூட்ட கட்டுப்பாடு:**<br>➢ உடலிலிருந்து அதிக அளவில் திரவ இழப்பு ஏற்படுதல் அல்லது இரத்த அழுத்தம் அதிகரிப்பு, போன்றவைகளால் நியுரோஹைபோபைசிஸ் தூண்டப்பட்டு ஆன்டிடையூரிடிக் ஹார்மோன் (ADH) எனப்படும் வாஸோபிரஸ்ஸின் அல்லது சிறு நீர்ப்பெருக்கெதிர் ஹார்மோன் வெளியிடப்படுகிறது.<br>➢ இதனால் சேகரிப்பு நாளம் மற்றும் சேய்மைசுருள் நுண்குழல்களின் செல்பரப்புகளில், அக்குவாபோரின்களின் எண்ணிக்கை அதிகரித்து, நீர் மீளஉறிஞ்சல் நடைபெறுகிறது.<br>➢ அதிக நீரிழப்பு தடுக்கப்படுகிறது.<br>**எதிர்மறை பின்னூட்ட கட்டுப்பாடு:**<br>➢ அளவிற்கதிகமாக பழச்சாறு அருந்தும்போது, ஹைபோதலாமஸில் உள்ள ஊடுகலப்பு உணர்வேற்பிகள் தூண்டப்படாததால் வாஸோபிரிஸ்ஸின் உற்பத்தி குறைகிறது<br>➢ இந்நேரத்தில், சேகரிப்பு நாளத்திலுள்ள அக்குவாபோரின்கள் சைட்டோபிளாசத்தினுள் சென்று விடுவதால், சேகரிப்பு நாளத்தில் நீர் ஊடுருவல் தடுக்கப்படுகிறது.<br>➢ எனவே, சேகரிப்பு நாளத்திலுள்ள நீர் அனைத்தும் வெளியேற்றப்படுவதால், நீர்த்த சிறுநீர் வெளியேறுகிறது.<br>**டயாபடிஸ் இன்சிபிடஸ் நோயின் அறிகுறிகள்:**<br>➢ அதிக தாகம்,<br>➢ நீர்த்த சிறுநீர் அதிகமாக வெளியேறுவதால் ஏற்படும் நீர் இழப்பு<br>➢ குறைவான இரத்த அழுத்தம். | 1<br>1 ½<br>1 ½<br>1<br>5 Mark |
| 21. A | **நியூரோஹைபோஃபைசிஸ் ஹார்மோன்கள்:**<br>1. வாஸோப்ரஸ்ஸின் அல்லது ஆன்டிடையூரடிக் ஹார்மோன்<br>2. ஆக்ஸிடோசின்<br>**வாஸோப்ரஸ்ஸின் அல்லது ஆன்டிடையூரடிக் ஹார்மோன்**<br>1. பெப்டைடு ஹார்மோன்<br>2. ADH, நெஃப்ரான்களின் சேய்மைசுருள் நுண்குழல் பகுதியில் நீர்மற்றும் மின்பகு பொருட்கள் மீள உறிஞ்சப்படுவதை மேம்படுத்துகிறது.<br>3. இதனால், சிறுநீர்மூலமான நீரிழப்பு குறைகிறது.<br>4. எனவே இதற்கு **ஆன்டிடையூரடிக் ஹார்மோன்** (சிறுநீர்பெருக்கெதிர்ஹார்மோன்) என்றும் பெயர்.<br>5. இந்த ஹார்மோனின் மிகை உற்பத்தி, இரத்தக் குழல்களைச் சுருங்கச் செய்து இரத்த அழுத்தத்தை உயர்த்துகின்றது.<br>6. இதன் குறைசுரப்பால் **டையபடிஸ் இன்சிபிடஸ் (Diabetes insipidus)** எனும் மிகைசிறுநீர் உற்பத்தி நிலைஏற்படும்.<br>**ஆக்ஸிடோசின்** (Oxytocin)<br>1. **பெப்டைடு ஹார்மோன்.**<br>2. குழந்தை பிறப்பின்போது கருப்பையை தீவிரமாகச் சுருங்கச் செய்கிறது.<br>3. பால் சுரப்பிகளில் பால் உற்பத்தி மற்றும் வெளியேற்றத்தைத் தூண்டுகிறது.<br>4. ஆக்ஸிடோசின் என்பதற்கு **துரிதப் பிறப்பு** என்பது பொருள். | 1<br>2<br>2<br>5 Mark |



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

| OR | | |
|---|---|---|
| 21. B | **வளர்க்கப்படும் மீன்களின் சிறப்புப் பண்புகளாவன:**<br>1. குறைந்தவளர்ப்பு காலத்தில் அதிக வளர்ச்சி வீதம் கொண்டவை.<br>2. வழங்கும் துணைஉணவைஏற்றுக்கொள்பவை.<br>3. சில பொதுவான நோய்களை தாங்கும் திறன் மற்றும் ஒட்டுண்ணிகள் தாக்கத்தைஎதிர்கொள்ளும் திறன் கொண்டவை.<br>4. கலப்பு மீன் வளர்ப்பிற்கு உட்படுத்தும் மீன்கள், பிறஇன மீன்களை தாக்காமலும், மற்றவைஅவற்றின் இயல்பில் குறுக்கிடாமலும் இணைந்து வாழும் தன்மையுடையனவாக இருப்பது அவசியம்.<br>5. வழங்கப்படும் உணவை உடல் பொருளாக மாற்றும் திறன் மிகுதியாக இருத்தல் அவசியம். | 1<br>1<br>1<br>1<br>1<br>5 Mark |

**அ. பாரதிராஜா,**
M.Sc., M.Ed., M.Phil., D.O.A, M.A.
முதுகலை விலங்கியல் ஆசிரியர்,
தே பிரித்தோ மேல்நிலைப்பள்ளி,
தேவகோட்டை.

www.Padasalai.Net



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com